Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO. 83 /**2017**

**Depostitions of PW- 1 Witness for**

| | |
|---|---|
| Name | சூரியகுமார் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of October 2023

Signature of Witness.

09.10.2023

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை—**

நான் தற்போது இராஜபாளையத்தில் குடியிருந்து பகுதிநேர ஆசிரியராக வேலை பார்த்து வருகிறேன். எதிரி மணிகண்டனை தெரியும். கடந்த 2007 ல் இருந்து ஸ்ரீவராக கருடசக்ரா ரியல் எஸ்டேட் அலுவலகத்தில் தவணை முறையில் பிளாட்டுகளை வாங்குவதற்காக மாதம் மாதம் பணம் செலுத்தி வந்தேன். 20 பிளாட்டுகளுக்கு 3 லட்சத்து சொட்சம் கட்டியுள்ளேன். எவ்வளவு கட்டினேன் என்று சரியாக நியாபகம் இல்லை. பின்னர் மேற்படி பிளாட்டுகளை முடிப்பதற்கு எதிரி காலம் தாழ்த்தி வந்த காரணத்தினால் நீதிமன்றத்தில் வழக்கு

போட்டேன். அதன் பின்னர் தற்போது எதிரி எனக்கு சேர வேண்டிய பிளாட்டுகளை எனது பெயரில் எழுதிக்கொடுத்துவிட்ட காரணத்தினால் தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டேன். என்னிடம் காட்டப்படும் சமாதானமனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எதிரியுடன் சமாதானமாகிவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். **(நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்,**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டேன் என்றால் சரிதான். எதிரி மணிகண்டன் நடத்தி வந்த ஸ்ரீவராக கருடசக்ரா என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் மாத தவணையாக செலுத்தி பிளாட்டுகள் வழங்கும் திட்டதில் சேர்ந்து நான் பல தவணைகளாக பணம் செலுத்தி 23 பிளாட்டுகளுக்கு மொத்த பணமாக ரூ.3,06,820 செலுத்தியுள்னேன். அதற்கு எதிரி இரசீதி வழங்கியுள்ளார். 23 பிளாட்டிற்கு பத்திர பதிவு தொகை ரூ.1,26,500/– எதிரியிடம் செலுத்தியுள்ளேன். மொத்தமாக எதிரியிடம் ரூ.4,33,320/– ஐ நான் செலுத்தியுள்ளேன் என்றும் பின்னர் எதிரியிடம் நானும், மற்ற நபர்களும் பல முறை அலுவலகத்திற்கு சென்று பிளாட்டுகளை எங்கள் பெயருக்கு முடித்து தருமாறு கேட்டதற்கு கடைசியாக எதிரி 06.04.2015 ம் தேதி நானும் என்னுடன் பிளாட்டுக்கு பணம் கட்டியிருந்து சாட்சி குருமூர்த்தி, பால சரஸ்வதி, பிரேமானந்தராஜ், மகேஷ்வரி, மகேந்திரன், குருநாதன் ஆகியோர்கள் சென்று எதிரியின் அலுவலகத்தில் கேட்டபோது எதிரி தரக்குறைவான வார்த்தைகளால் எங்களை அசிங்கமாக பேசினார் என்றும், எங்களை குடும்பத்தோடு கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் மேற்படி சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்திலும், கனம்

நீதிமன்றத்திலும் புகார் மனு கொடுத்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டதினால் எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

நான் நேரடியாக எதிரி மணிகண்டனிடம் பணம் செலுத்தவில்லை என்றால் சரிதான். எதிரி எப்போதும் அவரது அலுவலகத்திற்கு வரமாட்டார் என்றால் சரிதான். எதிரி மணிகண்டன் எனக்கு தெரியாதென்றால் சரிதான். என்னுடன் சேர்ந்த சாட்சிகளான குருமூர்த்தி, பால சரஸ்வதி, பிரேமானந்தராஜ், மகேஷ்வரி, மகேந்திரன், குருநாதன் ஆகியோர்களும் எதிரி மணிகண்டனிடம் நேரடியாக பணம் செலுத்தவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்களிடம் நான் தான் பணம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் புரோக்கராக இருந்து மேற்படி நபர்களிடம் பணம் வசூல் செய்து அதை எதிரியின் அலுவலகத்தில் கட்டினேன். நானும், மேற்படி நபர்களும் கட்டிய பணத்திற்கு ஒப்பந்தத்தின்படி எங்களுக்கு உரிய பிளாட்டுகளை முறையாக பத்திரபதிவு மூலம் பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான்.